# ஸ்ரீ பஞ்சமுக லகஷ்மீ நரஸிம்ஹ அந்தாதி

சதுர்மறை களவுடை நான்முகன் துயரத்து
சித்தமெலாம் சிறப்பின்யாருடை விளக்கிடுவார்
பரிமுகன் களவுகொண்ட வேதமதில்
சிறப்புடன் பெற்றுடைத்தார் மத்ஸ்ய உருவத்தே. (1)

உருவமுடை மத்ஸ்யம் ஆயினும் சிறிதாக
நற்கடல் மாதேறி வியக்கமுடை உருவமதை
பெரிதென கொண்ட உடனுறை களிர்பருவத்தே
சிறிதிகழ் கற்பக மருந்துகண்டேன். (2)

கண்டதின்று மகிழ்வுடை நாமமது சொல்வோர்
நற்கதி எந்நாளும் யாவனையும் வெல்வார்
களிறுமுக சோதரனாம் மாமனவன்
துளிருடை மதுசேர் குழல் கீர்த்தனமே (3)

கீர்த்தனமுரைபோர் நற்கதி அடைவார் பாடுகளால்
நர்த்தனப்ரியன் மலர்கொய்து அர்ச்சித்தால்
நாவினிக்க அவன்நாமம் கொண்டுடை பாரதனில்
மூலமந்த்ரம் உடனிருப்பான் எக்கனமும் நம்முடனே (4)

நம்மிடை சேருமதில் ஞாலத்தை பழமெனவே
பருகிடவாரீரே சேய்சேர்ந்தாய் போலேதினம்
வரும்நல்தினமென எதிர்பார்ப்பு நிற்கையிலே
தரும் வராக மூர்த்தியவன் புகழ்தனை துதிப்போர்க்கே (5)

துதிப்போர்க்கு புகழுண்டு எந்நாளும் மனத்துடை
சிகரென வளர்ந்திடுவோம் நற்கருணை கொண்டுடை
மகர திங்களுடை பத்மநாபன் சிவப்புடனே
வக்ரபுத்தி களைந்துடை பூவராஹ நின் சரணம். (6)

சரணமென சந்நிதிக்கு வருவோரின் துயர்நீக்கி
மரணபயம் போக்கிடுவாய் ஸ்ரீலகஷ்மீ நரஸிம்ஹா
தருணமிதே அரியவனை நினைத்திடுவோம்
அஞ்ஞான இருளதனை விரட்டுவது சித்தமுமாம் (7)

சித்தம்சிவம் அனைத்தும் அவனேயாம்
நித்தம் மலர்கொய்து மாலவனை ஸேவித்தால்
பித்தம் தெளியவைக்கும் மருந்து கிட்டுமதே
தத்தை கையில் பிடித்தவளை மணந்த மாலோலா (8)

மாலோல லகஷ்மீ நரஸிம்ஹனே மடியதனில்
பூலோகம் காத்துவரும் செஞ்சுலகஷ்மியை அமர்த்தி
அபயஹஸ்தம் காட்டி நல்வசித்வா அனைவர்க்கும்
சுபபலன் திக்கெட்டும் சீர் திகம்பரநாதா (9)

திகம்பரனின் ஒருமுகமாம் நாராயண தேவனின்
வடிவழகை காட்டுடை மாரிமலை கண்ணா
திருவடிக்கபயம் கோவிந்தா நின் கருணை
பரமபதம் சேர்ந்துநல் மாசிலாத மணிவண்ணா (10)

மணிவண்ண நின்கருணை திவ்யஸ்வரூபமென
வஸிசுடர் மாசறு பொன்கசிபு தேகமதில்
சீற்றமிகு கிழித்திட்ட நரஸிம்ஹமூர்த்தி நின்
வற்றாத கருணைதனை எங்களுக்கருள்வாயே (11)

அருள்வாயே பூலோக சுவர்க்கமதில்
பொருள்கொடுத்து மக்கள் செல்வமதை கொடுத்து
தடாகத்தே பூத்த தாமரைமலர்போலே
உள்ளத்தே புகுந்து எந்நாளும் இருப்பாயே. (12)

இருப்பாய் சிந்தையுள் வினதையின் புதல்வா
கருநாக பகைகொண்டு இனமழித்த தேவா
தோஷமதை களைவாய் கருத்மஜா
பெரிய திருவடியாம் ஸ்ரீ கருடமூர்த்தியே (13)

மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரியதாய்
வக்ரபுத்தி பொறாமை உடைத்திடும் வராஹ
கோரைகிழங்கொடு வெல்லமளிப்போம்
குடும்பத்தை சீர்கொண்டு காப்பாயே (14)

காத்திடும் நம்பிக்கை எந்நாளும் கொண்டோர்க்கு
ஆரோக்ய தேகம் கொடுத்தருள்சீலா
பாற்கடல்வாஸனின் கருணை கயல்விழி
சொற்கண்டு வாழ்வீர் ஸந்நிதி வருவோரே (15)

வருவோர்கள் யாவரும் ஸகல ஸம்பத்துடனே
பரிமுகன் வேதாந்ததேசிகன் உடனுறை
நற்காலசக்ரத்திலே பவனிஉலாவரும்
பரிமுகனனுக்ரஹம் கொண்டுமழை பொழியுமே (16)

பொழிந்த மாரியதனில் அஞ்சனை மகனவன்
அனுமந்தன் சஞ்சீவி கிரிகொண்டுடை
அன்யோன்ய மூர்த்திவன் அடிபணிவோரின்
துன்பமதை போக்கிடுவான் ராமதாஸனே (17)

ராமதாஸனவன் ஆதிஸேஷத்துடனிருக்கருகினில்
மலைமகள் பார்வையில் கலைமகளுடை சீர்
அலைமகள் உடனுடை தாமோதரனே
நிலைதனை உயர்த்தி உனைமறவா வரம் கொடுப்போனே (18)

கொடுப்போன் ஸ்ரீசக்ரசுதர்ஸனமூர்த்தியவன்
நெடுமாலே நின்கருணை என்சொல்வேன்
வளர்மதி திகழ்மார்ப நின்கடாகஷம்
எந்நாளும் இருந்திட அருள் செய்வாயே (19)

செய்திடும் கோளென அஞ்சுவார் நெஞ்சே
நல்லெண்ணம் கொண்டோர்க்கு ஒன்றும் நடவாதே
தீயசெயல் உருவாகும் எனகருதி மாந்தர்களும்
மாயவலையினில் சிக்கித்தான் உழல்வாரே. (20)

உழலுவதால் ஏற்றம் இருக்காதே வாழ்க்கைக்கு
கழல்கண்டு தினம்நினைப்பார் பார்த்தனுக்கு சாரதியை
நீழல்பட்டு நெஞ்சும் உருகிடும் குணத்தாலே
ஆழிமழைக் கண்ணா நீ இங்கு வருவாயே (21)

வரும்பல ஆயுட்காலமதனில் இருப்பதனால்
தரும் கற்பக வ்ருகஷ்கஷமாக அவனிருக்க
மாறும்நம் வாழ்க்கை நம்பிக்கை உனக்கிருந்தால்
கார்முகில் வண்ணனைத் துதிப்போர்க்கே (22)

துதித்து அவனை அனுதினமும் பூஜிக்க
மதிப்புயரும் உன்னிடத்தில் எந்நாளும் இக்கணமே
சாதனை செய்திட அனைவரது ஜனனத்தை
சோதனையாய் கருதாதே அவனிருக்கும் ஸமயத்தே (23)

ஸமயமிதே உடனுறை லகஷ்மியின் அருளிருக்க
தர்மம்செய் வாழ்நாளின் கடைசிகட்டதே
சீரான ஸனாதன தர்மம் நம் ஸமயத்தில்
பாண்டவரின் தூதனை பாங்குடனே வணங்கிட்டால் (24)

வணங்குமுறை எளிதேயாம் இன்றுரைக்க கூறிடுமோ
தனம்கொடு வளர்செழிப்புடனிடை யாதவரே
கானகத்தே வான்மேகம் ஒன்று கூடி வருங்காலே
மானதனை வினவினளே ஜானகியாம் லகஷ்மியுமே (25)

லகஷ்மீநாராயணன் அனைவரின் மனத்தினுள்ளே
எப்போதும் இருக்கின்றான் வேறுஎங்கே தேடுவனே
யாகாரனைவரையும் பரிகாசம் செய்யாதே
வேண்டிய வாகனத்தில் அவன்காட்சி கொடுப்பானே (26)

கொடுக்கும் கருணாமூர்த்தியவன் பாரகத்துள்ளே
சாதிக்கும் உயர்ஞால கண்டமதில் எழுந்திட்டு
ஓடிஒளிய மனம் எண்ணாமல் துள்ளியுமே
கூடியாம் சொல்வோம் நரஹரி நாராயணாவென்றே (27)

நாரண நம்பி கடைவிடா தேரினிலே
பார்த்தனுக்கு சாரதியை பக்கத்தில் ஸேவித்தால்
பங்கஜவல்லியவள் நாதனைத்தான் குரல்கொடுத்து
குங்கும்திலகமதை இட்டேநாம் அழைப்போமே (28)

அழைக்கும் மணியே ஒளியின்கீதமே நாதத்தால்
விழைத்து வருகின்ற நற்பயிரே நீவாராய்
தழைத்தோங்கும் குடும்பத்தை காத்திடுவாய் தயாளா
வேழமுகத்தோனின் மாமனே கதிரொளியே (29)

கதிரொளி பட்டிங்கு ப்ரகாஸம் ஜொலிக்கும்
விதியென்செயும் எனகேட்கும்கால் ஓடிடுமே
பதினெட்டு பாசுரம் அவனுக்கு இசைத்திட்டால்
மதி மயக்கம் தீர்க்கும் மாலோல தேவனே (30)

மாலோல நரஸிம்ஹா லகஷ்மீ ஸ்ரீ நரஸிம்ஹா
தாமோதர ஸாலிக்ராமம் சூடிய ஹ்ருகஷீகேஸா
வல்லமை எனக்கருள்வாய் வரதபுரிஸிம்ஹா
பல்லாண்டு இசை என்றென்றும் கூறுவனே (31)

கூறுவனே நமோ நாராயணாவென்று உன்னை
மாறுதலை யாவர்க்கும் தந்திடுவாய் பக்தவத்ஸலனே
தேவர்க்கதிபதியே தேவாதிதேவா நின்
வாசலை பரமபதவாசலை காணகண்கோடி தாராய் (32)

கோடிபுஷ்பம் கொண்டு மாரியாக உனைப்பணிந்தால்
வாடிடும் அடியவர் துன்பங்களை போக்குவாய்
ப்ரஹ்லாத வரதனே ஸ்ரீ லகஷ்மீ நரஸிம்ஹா
கரமுயர்த்தி கூப்பிடு ஹரிநாமம் தினம் சொல்லே (33)

சொல்வேன் நாதனுறை ஆதிஸேஷன் முகம்குளிர
வல்வினை யாவர்க்கும் அகற்றிடும் திவ்யஸ்வரூபே
கண்டமதில் நின் சக்ரலோபத்தே
வண்புருகேஷாத்தமா உனைத்தொழுவோம் இந்நாளே (34)

நாளென்செயும் கோளென்செயும் லகஷ்மீநரஸிம்ஹனை
தொழுவோர்க்கு யாவும் நித்தம் ஜயமாகும்
ஸத்சித்துவாக்கியங்கள் யாவர்க்கும் திருவள்ளூர்கேஷத்ரம்
பத்திரமாய் ஸேவிக்கும் பரமனிடம் நம்பிக்கையே. (35)

நம்பிக்கையுடனே செய்கார்யங்கள் தடையாகா
செம்பிட்டலோகம் போல் இறுக்கம் வாழ்நாளே
மாதவனே மஹாலகஷ்மியின் ஹ்ருதயப்ரியநாதா
வாதமதை போக்கி நல்வாஸம் நீ செய்யப்பா (36)

செய்யப்பா என்றுனை பக்தர்களும் கூப்பிடநீ
வைத்திடுவாய் ஆரோக்ய வாழ்வாக என்றென்றும்
வரும் துயரகற்றி ஒருவினை செயல்தடை நடக்கும்
நிற்கதி பொருளத்தே ஈந்திடு கேசவனே (37)

கேசம் பிடரியதை பாங்குடனே உடைத்தாங்கு
மாசிலா மணியாக தேவர்குழாம் உடனிருக்க
பஞ்சலோகமதில் ஈங்குவந்து ஆவாஹனமாயிருக்க
ஸ்ரீ பஞ்சமுக லக்ஷ்மீ நரஸிம்ஹா வரம் அருள்வாயே (38)

அருளிடும் அடியவர் துயரது பொடிபட
வருமதி குளிரது வாழ்க்கை நல்சுடர்விட
தருநாயகனின் சாலத்தே கடாக்ஷமதை
பொறுமைதனை யாவர்க்கும் நீ இங்கு அருள்வாயே (39)

அருளொளி விளக்காக எந்நாளும் இருப்பவனே
நற்கதி செல்வமாக மக்கட்பேறு கொடு எந்தைக்கு
வர்கலை ஜனார்தன மூர்த்தியே புஷ்கரனிதனிலே
சொற்பா இயற்றிடவே வரமெனக்கு தந்தாயே (40)

தந்திடும் ஞாலகீர்த்தனம் பரதம் ஏற்புடை
நாயக ஜெகந்நாத பரந்தாமா
கோவர்த்தனகிரிதாரி சூட ப்ரம்ஹமே
நாவினிக்க மனமினிக்க மகிழ்வுடன் வருவாயே (41)

வருவாய் யாவர்க்கும் கைநிறைய கிடைத்திடவே
பெருகும் நல்லாசி எந்நாளும் உன்னிடத்தில்
ஓங்கி உலகளந்த உத்தமா உன்புகழ்சாற்றி
நீங்கிலா இன்பம் பாரெங்கும் கிடைத்தருள்வாய் (42)

அருளிய வாக்கு ஜனங்களின் ஸந்தோஷம்
தருமிந்த புவிதனிலே மூர்த்தியுந்தன் கடாக்ஷம்
மனத்துயறகற்றிடும் மாதவ மதுசூதனா
தினமுனைத் தொழவே மனத்தினுள் புகுந்திராய் (43)

புகுந்தே சித்தம் ஜோதிமயமாக்கும் கருணை
மாகுடி யமர்த்திட்ட மலைக்குறத்தி கைபிடித்தாய்
செழுங்கருணை யாப்புதீர உள்ளம் குளிர்ந்தே
வழுவமைதி வாழ்க்கையிலே இருக்கச் செய்வாய் (44)

செய்வாய் செவ்வாய் அனைவரும் வருவாரோ
ஒய்தாய் போகாய் ஈதென்ன உன்நோக்கம்
கருமலர் திருவொடு ஏந்தெ ஒழுகுமாம்போல்
நறுமலர் கொண்டுனை பூஜிக்க வருவேனப்பா (45)

அப்பா தேவா என்றெல்லாம் உன்னை நாளும்
தப்பாமல் அனுதினம் உதடுகளால் உன்னை
மனத்துள் த்யானித்து யான்செயும் த்யானம்
சினமகற்றி கலையசெய்வாய் ஸிம்மாசலநாதா (46)

நாதனுந்தன் நாசிதனில் ஒட்டிவரும் ரோமம்
காசினியில் உனைதுதிக்க அழைக்குதப்பா நேரில்
கருவண்ண நேத்ரம்தனில் காந்தத்தின் ஒளியை
சிறப்புடனே காணுதய்யா மரகதத்தின் மேலே (47)

மேலது ஆதிஸேஷனுனை அரவணைக்க
வலதுகை சக்ரத்தின் சுழற்சியினைக் காண
அபயகுரல் கேட்டால் அஞ்சாதே எண்பாய்
நறுமனம் கமழ்வாஸ லகஷ்மீப்ரியநாதா (48)

நாதனென்னும் உள்ளொளி தீபத்தின் மத்தி
வாதமகற்றிடவே பின்செல்வோம் நல்புத்தி
சொற்சுடர் ஒளிதீபம் நடுவில் ஆராதனை செய்ய
பொற்பதத்தை தந்திடப்பா ப்ரஹ்லாத வரததேவா (49)

தேவாதிதேவனை சென்றுநாம் ஸேவிப்போர்க்கு
சாவாமருந்தாம் அம்ருதத்தை தந்திடுவார்
ம்ருத்யுக்கு ம்ருத்யுவாம் ஸ்ரீலகஷ்மீநரஸிம்மனுக்கு
சத்ருக்களும் யாருமுண்டோ சாலமிகு புவிதனிலே (50)

புவிபுயலாகாயம் நெருப்பென்றும் படைமுழங்க
பாஞ்சஜன்யம் சங்குதான் எடுத்து அவன் ஊத
பறந்து போகும் ப்ரச்சனைகள் என்ரென்றும் வாராமல்
வரும் துயர் பொடிபட நசுக்குபவன் அவனன்றோ (51)

அன்றோ ஒருவிரலால் கோவர்த்தன கிரியதனை
குடையாக பிடித்திட்ட கண்ணனவன் இன்று
பெயும் மாரி பொழிந்திடவே பக்தர்களைக் காப்பதற்கு
வரும் கோபாலக்ருஷ்ணனை வாழ்த்தயே நாம்பாடுவோமே (52)

பாடுவம் அனுதினம் உந்தனைப் புகழ்ந்து
சன்மானம் வாழ்த்தி நல்லாசியுடன் அனைவர்க்கும்
ஓங்குபுகழ் மணிவயிறு வாய்த்தவனை தினம்
தொழுங்கால் குற்றமின்றி குறையின்றி கூறுவனே (53)

கூறுவன் யாதென் கேட்குமென்றே வருமடியார்
துயரது கடிமணம் யாவர்க்கும் புரிகின்ற
தருமமிகு பாரதனில் செப்புவதை கேளுமின் வாரீரே
செருக்கது அகற்றியே மேல்கரம் உயர்த்துவமே (54)

உயர்த்துவது கரமன்றி வேறெதுவும் கிடையாது
சீலத்தே ஞானியர்க்கும் காட்சிதரு செப்புவதோ
மாறகன்ற கோனார் உன்வாசல் படியதனில்
கூறுவதற்கேது வார்த்தை சன்னிதிக்கு வருமின்னே (55)

வருமிங்கு நேத்ர த்ருஷ்டி தீர்ந்திடவே
கூணியது கூனகற்றி அருளாட்சி செய்கின்ற
மானியத்தை பெறாதுந்தன் சன்னதிக்கு வருங்காலே
தானியத்தை அள்ளித்தான் வீசுவனே வண்புர்ஷோத்தமா (56)

புருஷோத்தமன் பக்கத்துணை அனைவரிடத்திலுமிருக்க
கருவிழியதனில் காணுகின்ற காட்சிக்கு பூமாலை
சூட்டுவனே எந்நாளும் பாமாலை சன்னதியில்
தீட்டுவதற்கு ஓடியே இங்கு யாவரும் வாரீரே (57)

வாரீருந்தன் பாதங்கள் சன்னிதியில் பட்டிடவே
உருகிவரும் வெண்ணெய்போல் உள்ளம்தான் கசிந்தாலே
தருகிடுவான் கடிமனம் உங்கட்பேறுகட்கு
நம்பிக்கை உங்களுக்குள் எந்நாளுமிருக்கட்டும் (58)

இருத்தல்வருதல் நேத்ரம் அவன்மேல் பட்டிருக்க
உருகிதினம் பிழிந்துயாம் கீழ்விழும் வேளையிலே
கூர்மமூர்த்தியவன் தூக்கி நம்மை உயர்த்திடுவான்
நர்மதை நீரெடுத்து அபிஷேகம் செய்குவனே (59)

செய்குவன் அபிஷேகம் பாங்கான நீரினிலே
பிங்கலம்தான் சூட்டி புஷ்பமாலைகளும் தான்சூட்டி
ஓங்குபுகழ் வாழ்க்கை நமக்கு வேண்டுமென்று கேட்கையிலே
சங்குசக்ரதாரியவன் கதையுடனே தரிஸனம் பெறுவோமே (60)

பெறுவோம் யாவரும் தீர்க்க தரிஸனத்தை
அந்தனராக வந்த குருவேந்தர் குள்ளவுருவை
யாரென அறியாமல் எள்ளிநகையாடியதால் பார்கவிழ்ந்து
தலைகீழாய் தொங்கினனே மன்னவனின் புத்திரனாம் (61)

புத்திரபாக்யம் கிடைக்க இந்த ஸந்நிதி வருவீர்
நல்சீரான வாழ்க்கை நெறிகிடைத்திட வாரீரிங்கே
தனமனைத்தும் பெற்றிடவே தரித்திரனநிலை மறைய
தந்வந்திரியவர்தம் ஆசிபெற்று வருவோமே (62)

வருவோமிங்கே இப்போதே என்றுறைக்க கூடாமோ
நம்பிக்கையினில் சுட்டி காட்டியதால் வந்தாரிங்கே
தூண் துரும்பு யாவற்றிலும் இருக்கும் ஸிம்ஹம்
உன்நம்பிக்கை செவிசாய்க்கும் அற்புத சிங்கம் (63)

ஸிங்கவேள் குன்றத்திற்கு வரும் பக்தர் துயர்தீர
வங்ககடல் கடைந்த மாதவன் கேசவனை
தங்கமான எண்ணத்துடன் தரமாக நாம் பணிந்தால்
மங்காத வாழ்க்கைதனை அவர்நமக்களிப்பாரே (64)

அளிப்பாரென்றே யாம்மூர்த்திதனைப் பணிந்து
அரிஅரியென்று சொல்லும் வேளையிலே
புவியடங்க காத்திடும் தேவாதிதேவர்க்கு
நவின்றியங்கு பாமாலை நித்தம்யாம் சூட்டுவனே (65)

சூட்டும் நல்பாமாலைக்கு பணியும் ஶ்ரீராமனை
ஏரிதனைக்காத்த ராமாநீயும் அஞ்சனைப் புத்ரனின்
தேரிலேறி வந்திடும் அழகான வேளையிலே
மதுரமான முகந்தனில் நிலவொளிதான் வீசுதே (66)

வீசும் காற்றென நீள்விசுப்பும் சக்ரவர்த்தி
பாடும்மாந்தர் நின்வாழ்புரியதன் சாற்றுங்கால்
காடுகள் பலகடந்து வனவாசம் செய்தபின்னர்
பட்டாபிஷேகம்தான் செய்துகொண்டாய் ஶ்ரீராமா (67)

ஸ்ரீராமாவென்று சொல்லும் உந்தன்நாமம்
இதயம் பிளந்துகாட்டும் அனுமந்தன் வாழிநாமம்
புல்லாணி கேஷத்ரத்தில் தேவியுடன் நீயிருக்க
கல்லும் அகலிகையானதப்பா உன்பாதம் பட்டதினால் (68)

பட்டதூஉம் சாற்றுவதூஉம் உந்தன் செயல்
பட்டாடை ப்ரிய அலங்காரநாதனப்பா-நீ
குற்றேவல் எங்களை கொல்லாது போனாலும்
சற்றேநாம் பணிந்திடுவோம் அவன்பாத கமலத்தே (69)

கமலத்தின் மேலிருக்கும் லகஷ்மிப்ரியநாதா
உம்பர்கோமளவல்லிக்கு உடன் சேர்ந்த நாயக
நின்பாத தூளியதை ஒற்றியெடுக்கும் பாக்கியத்தால்
பண்பாட அருள்தாராய் ஸ்ரீ பலராமதேவா (70)

பலராமனென்றும் ஆதிஸேஷன் அவதாரம் காண
பக்தர்கூட்டம் கூடி ஸேவிக்க வரும் வேளை
அண்ணனாக உபதேஸம் நீ கண்ணனுக்கு செய்ய
திண்ணனூரில் பள்ளிகொண்ட பரமாத்மதேவா (71)

பரமாத்ம புருஷா பாக்யலகஷ்மீ நாதா நீயும்
அறம்செழிக்க வருவாயே நித்தம் எங்கள்முன்னர்
வரமளிக்க வருவாயே தேவா குணமது
செயல்படர்ந்து சாத்திடுவாய் குணசீலநாதா (72)

நாதனென்றும் கீதப்ரியனென்றும் யானுனைபாடும்போது
நர்த்தனம் செய்தே என் அருகில்வந்து நிற்கையிலே
ஊதும் குழலோசை செவிகுளிர கேட்குதப்பா
பாடும் அன்பர்முன்னே பரவசம்தான் ஏற்படுமே (73)

ஏற்படும் ஞாலகீர்த்திதனில் என்றென்றும்
போகம் ஆயிரம் கொடுத்துவந்து தருவாயே
புல்லாங்குழல் ஊதிநடுவிலே நிற்பானவன்
கண்முன்னர் காணகோடி காட்சிகளை தருவான் (74)

தரும்மதி குளிரது விடியலை தேட தினம்
வரும் நல்லசங்கதி உந்தன் வீட்டில் என்பர்
ஞாயிறு மீதேறி ஸேவை நீ கொடுக்கும்போது
மேலிருப்பான் அனைவர்க்கும் பக்தவத்ஸலனன்றோ (75)

அன்றோ மண்தின்னவில்லையென்று வாயைக் காட்ட
ஞாலம் காட்டிய பரமதயாள பங்கஜநயனா
ஆதிமூலமேயென கூடி அழைக்கையிலே
ஓடிவந்து ஸரணாகதியை நீ ஏற்றாய் (76)

ஏற்றம் எப்போதும் யாவர்க்கும் கிட்டிடுமே
சரணாகதியவனை நீ அவனிடம் கொடுத்திட்டால்
கூடயிருந்து விரைவாக காப்பற்ற ஓடி
வருவான் கஷ்டங்களை போக்கிடுவானே (77)

போக்கிடும் மாதுயர் கிரிபோலிருக்கையிலே
வாக்குசித்தம் நமக்களிப்பான் வராஹமூர்த்தியவன்
நாக்கினால் அவன்கீதம் உரக்கவே நாம்பாட
சாக்காடு வாராமல் அவன் நம்மைக் காப்பான் (78)

காக்கும் கரங்கள் தூக்கிய கைகளுடனேயாம்
விரட்டும் பகைவரை சக்ரம் ஏந்திய கரங்களினால்
கன்றொடு பசுவினங்களின் கூட்டத்தின் நடுவில்
ராதையோடு நமக்கென்றும் சாலமிகு பக்தி (79)

பக்தியினால் அவனை என்றும் கூப்பிடப்பா
படிகள் ஏறிவந்தால் படிப்படியாய் நம்கஷ்டங்களை
சட்டென குறைக்கும் ஒப்பிலாவப்பனவன்
சிகரம்போல் நாம் வாழ்வை உயர்த்திடுவான் (80)

உயர்நிலை யாதவர் குலக்கண்ணன் கீதையிலே
மயர்வொடு பகர்வதை வினயத்துடன் கேட்டிட்டால்
மட்டிலா இன்பம்தான் வாழ்க்கையிலே இருக்கும்
சாரங்கபாணியவன் ஸேவையை தரிஸனம் செய்வோர்க்கே (81)

செய்பவர் பூஜை வாசனை த்ரவ்ய நறுமலர் சூடியே
மாயவன் மணிவண்ணன் நூபுரவாசலில்
தாரோர் வெண்ணெய் அவனுக்கு கேட்கும்படியாய்
வாசல்கதவினை மணிஓசை கேட்கும் வேளையில் (82)

வேளை மூன்றும் துதிக்கும் மனத்திற்கு ஆறுதல்
தருமந்த மூர்த்தியவன் ஹ்ருதயம் குளிரவே
நம்பிக்கையாக கூப்பிடும் வேளையில் வருவோனே
அஞ்சாதேயென அபயம் நமக்களிப்பானே (83)

அளிக்கும் கைகளில் மணிமுத்து பலவாராய்
ஜொலிக்கும் காட்சியை காணவே வாரீரோ
நடக்கும் நல்லதென எண்ணியே நாளும்
கடக்கும் பாதையை கடந்து நீ வருவாயப்பா (84)

வருவாய் திருவாய் மலர்ந்தருளி இங்கு
ஸந்நிதி வருவோர் துயர்களைவாயே
ப்ரஸாதம் கொடுக்கும் எந்தனைக் காத்து
வரப்ரஸாத மூர்த்தியாய் தினமும் இருப்பாயே (85)

இருக்கும் ஒளிகொடு வறுமையகற்றியே
வஸுதேவர் நந்தனாய் வளர் வாஸுதேவனே
கம்ஸனை அழிக்க பலவித லீலைகள் நடத்தியவா
த்வம்ஸிப்போரை நீயழிக்கவே வா வா வா (86)

வா வா என்றால் வந்திங்கு நர்த்தனம்
ஆடிடும் காளிங்க ஸேவையை காண
அனைவரும் ஆவலாய் இருக்கையிலே ஓடி
நர்த்தனம் காளிங்க மூர்த்தியே வாராயோ (87)

வாராய் வன்திட்ப மதியதில் ஜோதியாய்
காணாய் நின் திருமுக மண்டலத்தே
ஜாம்பவதியினை நீயும் கரம்பற்றும் காட்சி
இதயத்தில் ஆனந்தமாக தெரியுதப்பா (88)

தெரியுமெலாமெனக்கு என்றென்றும் நினையாதே
அவனில்லாமல் யாதொரு சக்தியும் கிடையாது
இதை நீ தெரிந்திட்டால் நற்கதி உனக்குண்டு
மாயக் கனவுகளை அகற்றியே நல்வாழ்க்கை வாழ்ந்திடுவோமே (89)

வாழ்ந்திடும் வாழ்த்திடும் அனைவரையுமே புவிதனில்
தாழ்வுநிலை யாவர்க்கும் தருவாரோ தினம் நினைத்தால்
ஈரைந்து விரல்கொடுக்கும் காரணமும் யாமறியேன்
என்று நினைக்கும் வேளையிலே விளக்கமும் தெளிந்தேன் (90)

தெளிதேனால் உனக்கு நான் திருமஞ்சனம் செய்யுங்கால்
துள்ளியமாய் கீர்த்தனமும் உன்மீது நான்பாட
பார்த்தனுக்கு உபதேசம் செய்துவிட்டு
பார்த்தன்பள்ளியுரை பெருமாளே மகிழ்வுடனே பற்றுவனே (91)

பற்றுவன் கடலது பெரியதாய் நின்பாதமிரண்டினை
கற்றுக்கறவைகள் பல கறந்து கானம் சாமம்தனை விளித்து
சிம்பாசலத்திலுறை சீரிய சிங்கவுருவெடுத்து
கர்ஜித்து துஷ்டங்களை விரட்டிடுவாய் தேவா (92)

தேவர்கள் மலர்மாரி பொழிந்துவரும் நாளின்றே
சாமகானத்திலுடை வீணை ம்ருதங்க தாளத்துடன்
ஆஹுதிகள் ஏற்புடை பத்ரிவாழ் நாதனவன்
களிப்புடன் சித்தம் அனைத்தையும் நீ தருவாயப்பா (93)

தருவாய் இத்தருணம் நிலவொளியின் சிற்பத்தில்
கரும்பென இனித்திடுமே உன் நாமம் எந்நாளும்
பல்லாண்டிசைத்திட்டு ஓங்குபுகழ் நீயடையாய்
நெஞ்சே நின் பாதகமலத்தை பற்றிடுவாய் இப்போதே (94)

இப்போதே சொல்லிவைத்தேன் உன்நாமம் நரஸிம்ஹா
தப்பான வழிதனிலே செல்லாமல் உந்தன் கீர்த்தனம்
வஞ்சிப்பாவால் நாவினில் உன்னைக் கூற
கொஞ்சியே கிள்ளிதனை அழைத்திடுவோம் அருகே வா (95)

வாழும் உலகினில் எத்துயரமேற்படாது நீ இருப்பாய்
நம்பிக்கை முழுதாக உன்னிடம் தஞ்சம் என்றால்
கண்குளிர கதிரவனின் ஒளிப்ரகாஸம் நீ கொடுக்க
பொன்பெயரோனுடல் கிழித்த ஶ்ரீலகஷ்மீ நரஸிம்ஹா (96)

நரஸிம்ஹா வென்காடுடையோர்க்கு முத்தொளியாய் திகழ்ந்திடவே
தீபவொளியினில் காணும் தரிஸனம் தெரியுமென்றால்
என்று உன்னை பார்த்திடவே பார்த்தனின் உபதேசம்
கேட்பேரே இப்போதே வாழ்நாளில் உயர்ந்திடவே (97)

உயர்நலம் கிட்டிடும் ஸந்நிதி வருவோர்க்கு
தனம்தரும் பெயர் யாவும் நலமாக சேர்ந்திடுமே
செஞ்சுலகஷ்மியை இடவாமபாகத்திலே நீயமர்த்தி
தரிஸனம் காண செய்யும் காந்தஸ்வரூபனே (98)

ஸ்வரூபா நின் அபயம் விளித்திட்டேன் உடன்வாராய்
நரஹரி ஸ்லேஷ பயமகற்றியெனைக் காப்பாய் ஶ்ரீஸைலநாதா
முரஹரி முராரி என்றெலாம் உனைப்பாட யானும்
அவ்வாறே பணிந்திட்டேன் பதமலர் தருவாயே (99)

தருமென குலத்தினில் குழந்தையாய் நீ பிறக்க
ஸந்நிதிக்கு நம்பிக்கையில் செய்பரிஹாரம் இருக்க
குழந்தையாய் நீயே வந்து பிறந்திடுவாய் ஜகதீஸா
பதமெனக்கருள்வாயே பக்தவத்ஸலநாதா (100)

நாதனென்றும் நாமனென்றும் பலவாறு உனைக்கூவ
பாதஒலியாலே பக்தரைக் கவர்ந்து ஓசைகொடுக்க
நல்புத்தி வீர்யத்துடன் விவேகமாக இங்கே உன்
அற்புதத்தை தினம் காட்டும் அன்பர்க்கருள் தேவா (101)

அன்பர்க்கருளும் உம்பர்கோமானே ஶ்ரீதேவப்ரிய
மூர்த்தியுந்தன் கீர்த்தியினை பாக்களால் வடிப்பேனே
சாரீரம் கொடுத்தருள்வாய் சத்ரவடநரஸிம்மா
நல்லாம்பல் தடாகத்திலுறை லக்ஷ்மீ மணவாளா (102)

மணவாள மாமுனியால் திவ்யாபரணம் காட்டி
அழகுடனே நம்பியவன் கம்பீரமாய் நிற்கும்போது
வடமெடுத்து தேரினிலே உல்லாச பவனிவர
குடமெடுப்போம் பானகப்ரியத்வாஸா (103)

த்வாஸர் கல்பித ரிஷியாக ஹாரமதை தொடுத்திட்ட
பாலகன் ப்ரஹ்லாதன் உளம்குளிர கண்முன்னே
பாம்பினின் நஞ்சுமேலேவராமல் காத்தவனே
காக்கும் பரப்ரம்ஹ ஸிம்ஹமுக மூர்த்தியே (104)

மூர்த்தியினுடையுறை மஹாலக்ஷ்மீ தேவியவள்
பக்கத்தில் ப்ரஹ்லாதன் ஆனந்தமாய் கைகூப்ப
ஸேவிக்கும் தேவர்களும் மகிழ்ந்தனரே சாந்தஸ்வரூபன்கண்டு
ருணவிமோசனம் நல்கும் கலியுக வரதன் நீதானே (105)

தானுகந்த திருமேனி ராமானுஜர் கண்முன்னர்
வானளாவி மேவிநின்ற த்ரிவிக்ரமதேவா
பூமாரி பெய்திடவே யாவரின் சித்தங்களையும்
தெளியவைக்கும் தெள்ளியசிங்கவேள்குன்றசீலா (106)

சீலமென பறக்கும் பகஷிகளில் முதல்முகமாய் கருடமுகம்
காலமெலாம் பகஷிதோஷமகற்றிய வினதையின் புதல்வா
பிங்களவர்ண வஸ்த்ரமதை நீயுடுத்தியிருக்கையிலே
மங்களமாயிருக்குதப்பா நல்லதெல்லாம் இங்கு நடக்கவே (107)

நடக்கவும் காலிரண்டு கொடுத்ததெற்கு என்று கேட்க
அவன் பரமபதம் நாடி செல்லத்தான் என்றாயோ மேலதி
ஸாலிக்ராமமதை ஹாரமாஹ கேட்ட உன்னுடைய
காலிரண்டு போதுமோ என்றுயான் கேட்குவனே (108)

கேட்கும் மணியோசை இந்த ஸந்நிதியில் நித்தம்
ப்ரார்த்தனைகள் தெரிவிக்க கிடைத்த நல்சித்தம்
மருதஹாஸினி லகஷ்மிக்கு ப்ரியம் என்று தெரிந்தவுடன்
இட்டுகையில் அழகுபார்க்கும் அடியவனுக்கடியனானேன். (109)

அடியவன் படும்துயர் உன்செவியில் விழுந்திலையோ
பொடியாழ்வார் தொண்டரடி பாசுரங்கள் சொன்னபின்னும்
கடிமணம் திகழ்கின்ற வாழ்நாளில் சக்ரத்தால்
சொல்திறன் எமக்களிப்பாய் உலகளந்த பெருமாளே. (110)

பெருமாளின் பக்கத்துணையிருக்க காரியஸித்தியாம்
வரும் துயரனைத்தும் பொடிபொடியாய் கறையுமாம்
நினைத்ததுடன் நடக்க வருவீர் இந்த ஸந்நிதிக்கே
ஐயமுண்டு எல்லாவற்றிலும் கலங்காதே பிள்ளாய்காள் (111)

பிள்ளைவரம் கேட்டு பலரிங்கு வருகையிலே
கிள்ளியமுதன் ஸேவை கண்டு ஸௌபாக்யம் வருமதினால்
யாதொன்றும் குறைவில்லையென நீவிர் கருதுவதில்
மலரனைத்து அர்ச்சனை செய்வோமே அவன்பாதகமலத்திற்கே (112)

பாதகமலம் பொன்னடியால் பலதிக்கும் புகழ்சாற்ற
பாததூளிதனை பட்டாலோ பரவஸம்தான் கிடைத்திடுமே
ஆதிஸேஷனவதார தினமாக தினமும் எண்ணி
ஸர்ப்பதோஷம் தீர்ந்திடவே பாலால் உனைதிருமஞ்சனமே (113)

திருமஞ்சன நீராட்டி புத்தாடை பட்டுடத்தி
கந்தம்கமழ் வாசனை த்ரவ்யத்தை தெளிந்திட்டு
தந்தமுடைத்து பாரதம்தான் எழுதிய
விஷ்வக்ஸேனரின் அனுக்ரஹங்கள் யாவர்க்கும் கிடைத்திடுமே (114)

கிடைத்திடும் தீபஒளியில் நல்தரிஸனம் வேண்டியபடி
மடைதிற வெள்ளம்போல் கீர்த்தணங்கள் இசைத்திட
நல்ஸ்ருதியுடன் ஸாமங்களும் கானமது இசைந்திட
பண்ணொடு லயநடணமது சிறப்பாக நடந்ததுவே. (115)

நடக்கும் பூமாதேவி துணையுண்டு இங்கேதான்
வாழியநீவிர் புவிகாக்கும் பூவராஹதுணைகொண்டு
செப்பிடுவேன் சொல்நயம் எங்கு என்று கேட்க
பஞ்சமுகலகஷ்மீ நரஸிம்ஹ ஸந்நிதியில் மட்டுமே (116)

மட்டும் எனதெரியும் மூர்த்தியினுன் சிறு உருவம்
த்ரிவிக்ரம ஆகாயம் பறந்த கால்களைத்தூக்கி
காணும் ஸேவை கண்டு ஆனந்தம் வருமென்றால்
என்னே யான்செயும் பாக்யம் என்று தினம் சொல்லுவதே (117)

சொல்செயல் இரண்டும் சூர்யசந்திரன் திக்காகும்
ஆல்தீபம் விரதொமொடு சனிதோறும் நீயிருந்தால்
சொல்நயவாக்குஸித்தி உனக்கும்தான் கிடைக்குமப்பா
பக்தவத்ஸலநாதா பாற்கடல்நின் ஸயன திருக்கோலம் (118)

திருக்கோலம் கல்யாணம் சிறப்புடன் நடக்குமிங்கு
மணக்கோலம் காணும் நல்லடியார்கள் புத்ரனுக்கு
மணமேற்ற கிடைத்திடுவாய் நங்காய் அவனிந்தன் வாழ்க்கைக்கே
சரியாக நடக்கும் சீரான விருப்பத்தே (119)

விருப்பம் இருந்தால் பக்தியுடன் பூமாலை
நெருப்பென்ற நின்ற நெடுமாலே அர்ச்சிக்கும்போது
நரஹரிரூபம் கொண்டு சங்குசக்ரதாரியானாய்
வீராஞ்சநேயரால் கர்ஜித்து வருவாரிப்போது (120)

இப்போதெல்லாம் ஸந்நிதியில் காலமது நல்சமயம்
தப்பெலாம் குறைத்து படிபடியாய் சிந்தனையின்னேதான்
பார்கவ ஸிம்மமது உள்ளிருக்கும் வேளையிலே
கனிவொடு தந்தருளும் யோகானந்தத்தே (121)

ஆனந்தம் குறையாமல் இருக்கச் செய்யும் நாமமது
நமோநாராயணா என்றிப்போ சொல்வீரே
தமோகுணம் அனுகாது காப்பீரிடல் வந்து
தாமோதரனை வேண்டியபின்னர் தடங்களும் உடையுமே (122)

உடையவர் ராமானுஜர் சொன்னபடி செய்திட்டால்
படைவினை மூர்த்தியவன் ப்ரம்மனின் புத்திரனால்
ஜடாமுடி ஈசனது உருவம் காண எடுத்தவதாரம் காண
குடமுழக்கேற்பாய் ஶ்ரீபஞ்சமுக லக்ஷ்மீ நரஸிம்ஹா (123)

நரஸிம்ம முகம்கொண்டு சிந்தை தெளியவைத்து
அருளாட்சி செய்துவரும் சாந்தஸ்வரூபனது
மாகடல் கொண்டவனின் மாயவனின் லோகத்தில்
சீலந்தனில் காட்சிதரும் கற்பக வ்ருக்ஷமே (124)

வ்ருக்ஷம் கற்பகமெனும் ஸந்நிதியிலிருக்க
தினம் அதனை பிங்களவர்ணத்தில் திலகமிடும்போது
ஸௌபாக்யம் பலவும்தான் வந்து சேரும் வருவோமே
யாமுறைக்க கேட்டிடுவீர் கற்பகவ்ருக்ஷம் ஸ்தலமிதனை (125)

ஸ்தலம் பலவிருப்பின் புவிதனிலே மேலோங்கி
நரஸிம்ஹன் ஆவாஹனத்திலிருக்கும் வ்ருக்ஷம்
பலகோடி மாந்தர்கள் வேண்டுதலின் பயனாக
பலபலவாம் செல்வங்களை அள்ளித்தரும் விந்தையினை (126)

விந்தை என்சொல்வேன் அற்புத ப்ரஸாதமிதை
பருகிடவே வாருமைய்யா பாற்கடல்வாசத்திற்கே
நாராயண மந்த்ரம் உரைக்கும் கருடனின் அலகாலே
ரக்ஷித்து காத்துவரும் கற்பகவ்ருக்ஷமிதே (127)

வ்ருக்ஷம் பாரிஜாதம் இந்த ஸந்நிதிக்கே
பாரிமலர் சொறிய மாரியாக பொழுதுதனில்
நல்வாசனை கந்தமது கோரோசனத்துடனே
கஸ்தூரி திலகமது அவனுக்கு வைப்போமே (128)

வைத்திடும் கஸ்தூரி திலகாங்கித கோரோசனம்
ஸ்ரீசந்தனம் கமழ்கின்ற நல்வாசத்தே பெருமாளும்
நாச்சியாருடன் பத்மாஸினியுடன் ஸ்ரீநிவாஸன்
கைத்தலம் பற்றும் கல்யாண உற்சவமே (129)

உற்சவம் அப்படியிங்கே நடக்கையிலே பக்தர்
சந்தோஷம் பரவசநிலையும் அமைந்திடுமே வாழ்நாளில்
உலகமது உய்யுண்ட பெருவாயா உந்தன்னை
பாடியே நாம் பறைகொள்வோம் பாண்டுரங்கதேவா (130)

ரங்கனை கண்குளிர ஸேவிப்போர் ரமணீயலோகத்தே
சங்கென முழங்கும் பாஞ்சஜன்ய ஓசைதனை கேளீரோ
பாற்கடலுள் பள்ளிகொள்ளும் ரங்கனது பரிபூர்ணம்
நாற்கவியும் பாட்டிசைக்கும் ஸ்ரீபஞ்சமுகலக்ஷ்மீ நரஸிம்ம கேஷத்ரமிதே (131)

கேஷத்ரம் பலவிருக்க பாரதனில் பேருற்ற சக்தியது
நேத்ர த்ருஷ்டி தீர்த்துவைக்கும் ஸ்ரீபஞ்சமுகலக்ஷ்மீ நரஸிம்ம ஸந்நிதிக்கே
வாரீரோ உடனடியாய் உங்கள் குறை தீர்ப்பதற்கு
நம்பிக்கை ஒன்று வைத்து சரணாகதி அடைவீரே (132)

அடைவோம் அடைக்கலப்பத்து பயின்று
சாற்றுமாலை பாமாலை அவனுக்கு சொல்லித்தான்
அந்தாதி தினம் சொல்லி அனுக்ரஹம் பெறுவதற்கு
நாமம் பலசொல்லி நவின்றேதான் அழைப்போமே (133)

அழைப்போம் ஹரியென்று அனுதினமும் அவனின்பாதம்
பற்றித்தான் ஸந்தோஷ வாழ்க்கைக்கே செல்வோம்
ஸந்தான பாக்யம் வேண்டிவரும் அடியார்கள்
திருமஞ்சனம் நின் கையால் செய்விப்பீர் உற்சவமூர்த்திக்கே (134)

மூர்த்தியது விக்ரத்தின் மேலிருக்கும் ஆதிஸேஷன்
ஸர்ப்பதோஷம் யாவுமிருப்பின் உடன் தீர்ப்பான் நம்பிடுவீர்
வன்சொல் சொல்லியதால் முன்பிறவியில் இருப்பின்
வலம்புரிசங்கெடுத்து தோளிரண்டில் நீர்சேர்ப்பீர் (135)

சேர்க்கும் பலவாறு த்ரவ்யங்கள் அவனின் தேகம்
அலங்கார ப்ரியனவனின் ஆடையலங்காரம்
ஸ்வர்ணத்தின் மத்தியம் சுற்றிலுமே லகஷ்மீநாராயண
ஸாலிக்ராமம் ஹாரம்தொட்டு ஸேவித்தால் முக்திதானே (136)

முக்தியன்றி வேறுகைக்கு வேறு என்ன வேண்டும்
ஹிரண்யம் முக்திகொடுக்காதென்பதை அறிவாயே மனமே
ஸிம்ம கர்ஜனை செய்துவரும் வேளையிலே
மனக்கவலை தீர்த்து வைப்பான் ஸ்ரீபஞ்சமுகலகஷ்மீநரஸிம்மன் (137)

நரஸிம்ம சொப்பனம் உனக்கென்று வரும் நாளில்
பரிபூர்ண அனுக்ரஹம் கிடைத்ததென்று நீ நம்பு
தெள்ளிய சிங்கமது சீருடனே உனையண்டி
கூடயிருப்பான் எந்நாளும் உன்னிடத்தே ஸத்யமிதே (138)

ஸத்யஸ்வரூபனவன் எக்காலமும் தொழுவோர்க்கு ஜயமாமே
ஸ்ரீ ஹரிபாதகமலத்தை தொழுவர்க்கு ஸரணாகதி கிட்டும்
கைகண்டவர்க்கு கரம் தூக்கிவிடும் ராமனவன்
ஹ்ருதய தடாகத்தில் எப்பொழுதும் இருப்போனே (139)

இருப்பான் எட்டுதிக்கும் என் ப்ரிய நாதனவன்
சீதாபிராட்டியுடன் கை பிடித்த மதுராந்தகத்தினிலே
நாடுவோர் செல்வோம் பெறும் தினமுயரும் கலங்காதே
அண்டுவர் யாவரையும் ரகஷிப்பான் ஸ்ரீராமனே (140)

ஸ்ரீராமஜயம் என்றே எழுதியே வருவோர்க்கு
ராமகல்யாணம் செய்யும் பாக்யம்தான் பெற்றிடுவீர்
ஓங்கி உலகலந்த பரமனாம் பட்டாபிராமனது
அனுக்ரஹம் பெற்றிடவே வருவீர் சன்னதிக்கே (141)

சன்னதியிலே ஸ்ரீபஞ்சமுகலகஷ்மீ நரஸிம்ம ப்ரஸாதம்
உந்தனுக்கு ஸமர்ப்பிக்கும் வேளையிலே நடக்கும்
நினைக்கும் ஸகலரது ப்ரச்னைகளும் தீருமே
என்றைக்கும் ராமனது பாதத்தை பணிவோர்க்கே (142)

பணிவர் யாவரின் குலம் செழிக்கும் நாமம்
கீர்த்தியின் உச்சத்திற்கு கொண்டுசெல்லும் நாமம்
வாழுமுலகினில் பார்செழிக்க வாழும் நாமம்
அனுமான் யான் சொலும் ஸ்ரீராமநாமம் (143)

ஸ்ரீராம ஸ்ரீராம ஸ்ரீராம ஸ்ரீராம ஸ்ரீராம
ஸ்ரீராம ஸ்ரீராம ஸ்ரீராம ஸ்ரீராம ஸ்ரீராம
ஸ்ரீராம ஸ்ரீராம ஸ்ரீராம ஸ்ரீராம ஸ்ரீராம
ஸ்ரீராம ஸ்ரீராம ஸ்ரீராம ஸ்ரீராம ஸ்ரீராம (144)

ஸ்ரீராமனின் நாமம் அனைத்தும் கிடைக்கும்; பாலகன்
உள்ளத்தில் இருக்கும் சிந்தையில்;திருக்கல்யாணம்
செயும் வேளை சீக்கிரம் வருமே ; உடனடியாய்
யாவையும் கிடைக்கும் ஸந்நிதி வருவோர் உளம் குளிர்ந்தே (145)

**ஸம்பூர்ணம்**